**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்**

2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் நாள் வியாழக்கிழமை
(2053 திருவள்ளுவராண்டு சுபகிருது வருடம் மாசித்திங்கள் 04-ம் நாள்)

I.A.No.1/2021
in
O.S.No.99/2021

சோமசுந்தரமூர்த்தி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

எ.ஆர்.ராஜாமணி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 10.01.2023 தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.K.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.வி.சி.அஜீத்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரையில் இந்த நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

இந்த மனுவானது, எதிர்மனுதாரர் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்தினை வழக்கு தொகை ரூ.9,78,200/-க்கு தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்து (Order Attachment before judgement) உத்திரவு பிறப்பிக்க வேண்டி ஆர்டர் 38 ரூல் 5 மற்றும் CPC-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**:-

இந்த மனுவானது, இந்த மனுவின் மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி. வாதி இந்த வழக்கை தாவா தொகையை பிரதிவாதியிடம் இருந்து திரும்ப பெற தாக்கல் செய்துள்ளார். கடந்த 01.03.2019-ம் தேதியன்று மனுதாரரிடம் எதிர்மனுதாரர் குடும்ப மற்றும் வியாபார

செலவிற்காக கடனாக ரூ.8,00,000/- பெற்றுக் கொண்டு அதற்கு மாதம் ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து மனுதாரர் கேட்கும் போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு பிராமிசரிநோட் எழுதிக் கொடுத்துள்ளார். மனுதாரர் எதிர்மனுதாரரை பலமுறை தொகை செலுத்தக் கேட்டும் எதிர்மனுதாரர் வேண்டுமென்றே தொகை செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்தார். எதிர்மனுதாரர் அசலோ வட்டியோ இதுவரை செலுத்தவில்லை. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கடன் தொகை செலுத்தக் கூடாது என்று அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை வில்லங்களுக்கு உட்படுத்த தீவிரமாக முயற்சி செய்து வருகிறார். எதிர்மனுதாரர் அவ்வாறு சொத்தினை வில்லங்களுக்கு உட்படுத்தினால் வழக்கில் கோரியுள்ளபடி வாதி தீர்ப்பு பெற்றாலும் தொகை வசூல் செய்ய இயலாமல் போய்விடும். எனவே தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யக் கோரி மனுதாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 12 சதவீத வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். ஆனால் மனுதாரர் 9 சதவீத வட்டி கோரியுள்ளார். எனவே வழக்கு தொகை ரூ.9,78,060/-க்கு உத்திரவாதம் தாக்கல் செய்ய வேண்டும் தவறும் பட்சத்தில் மனுச் சொத்தினை ஜப்தி செய்ய வேண்டும். எனவே, இந்த மனுவினை அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் முன் வைக்கப்பட்டுள்ளது.

<u>3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிர்மனு உரை:</u>

எதிர்மனுதாரர் தரப்பில், தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையில், இந்த மனு பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கக் கூடியது அல்ல என்றும், எதிர்மனுதாரர் உண்மையென்று ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய பிற சங்கதிகளை மனுதாரர்களே உண்மையென்று நிரூபிக்க வேண்டுமென்றும், மனுதாரர் மனு பிரமாணப்பத்திரிக்கை பாரா 1-ல் கடந்த 01.03.2019-ம் தேதியன்று மனுதாரரிடம் எதிர்மனுதாரர் குடும்ப மற்றும் வியாபார செலவிற்காக கடனாக ரூ.8,00,000/- பெற்றுக் கொண்டு அதற்கு மாதம் ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து மனுதாரர் கேட்கும் போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு பிராமிசரிநோட் எழுதிக் கொடுத்துள்ளார் என்று கூறியுள்ளது தவறாகும். மனுதாரர் மனு பிரமாணப்பத்திரிக்கை பாரா 2-ல் மனுதாரர்

எதிர்மனுதாரரை பலமுறை தொகை செலுத்தக் கேட்டும் எதிர்மனுதாரர் வேண்டுமென்றே தொகை செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்தார் என்றும், எதிர்மனுதாரர் அசலோ வட்டியோ இதுவரை செலுத்தவில்லை என்றும் கூறியுள்ளது தவறாகும். மனுதாரர் மனு பிரமாணப்பத்திரிக்கை பாரா 3,4-ல் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கடன் தொகை செலுத்தக் கூடாது என்று அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை வில்லங்களுக்கு உட்படுத்த தீவிரமாக முயற்சி செய்து வருகிறார் என்றம், எதிர்மனுதாரர் அவ்வாறு சொத்தினை வில்லங்களுக்கு உட்படுத்தினால் வழக்கில் கோரியுள்ளபடி வாதி தீர்ப்பு பெற்றாலும் தொகை வசூல் செய்ய இயலாமல் போய்விடும் என்றும், எனவே தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யக் கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 12 சதவீத வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார் என்றும், ஆனால் மனுதாரர் 9 சதவீத வட்டி கோரியுள்ளார் என்றும், எனவே வழக்கு தொகை ரூ.9,78,060/-க்கு உத்திரவாதம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மனுச் சொத்தினை ஜப்தி செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளது தவறாகும். உண்மையில் எதிர்மனுதாரருக்கு அவரது நண்பர் கெஞ்சனூர் வேலுச்சாமி என்பவர் மூலமாக மனுதாரர் அறிமுகமானவர் ஆவார். ஆனால் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும், எவ்வித வரவு செலவு இருந்தது இல்லை. எதிர்மனுதாரருக்கு வேண்டாத நபர்கள் தூண்டுதலின் பேரில் மனுதாரர் அவர்களுக்காக எதிர்மனுதாரரின் கையெழுத்தை மோசடியாக செய்து போர்ஜரியாக பிராமிசரியை உருவாக்கி பொய்யான காரணங்களைக் கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேலும் தாவா பிராமிசரியில் சாட்சி கையெழுத்து செய்துள்ள மோகன்பிரசாத் என்பவரையும், பிராமிசரியை எழுதியுள்ள சிதம்பரம் என்பவரையும் எதிர்மனுதாரருக்கு யார் என்றே தெரியாது. மேற்படி தாவா பிராமிசரியில் உள்ள கையெழுத்து எதிர்மனுதாரரின் கையெழுத்து அல்ல. எனவே எதிர்மனுதாரரின் பிராமிசரியில் உள்ள கையெழுத்தினை அவரது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்வதற்காக கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப தனியாக மனுதாக்கல் செய்ய உள்ளார்.

மேலும் மனுச்சொத்து மற்றும் பிற சொத்தினை எதிர்மனுதாரர் அவரது மகளான சௌமியாஸ்ரீ என்பவருக்கு கடந்த 13.03.2019-ம்தேதியிட்ட சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.1401/2019-ல் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி எழுதிக்கொடுத்து அன்றைய தினமே சுவாதீனமும் கொடுத்து விட்டார். பின்னிட்டு சௌமியாஸ்ரீ ஒரு பகுதி சொத்துக்களைப் பொறுத்து அவரது சகோதரி இலக்கியாவிற்கு கடந்த 08.01.2020-ம் தேதியில் ஆவண எண்.124/2020-ன் படியும், கடந்த 23.01.2020-ம் தேதியன்று ஆவண எண்.319/2020-ன் படியும் 2 தானசெட்டில்மெண்ட் பத்திரங்களாக எழுதிக்கொடுத்துள்ளார். பின்னிட்டு எதிர்மனுதாரரின் மகள்கள் சௌமியாஸ்ரீ மற்றும் இலக்கியா இருவரும் சேர்ந்து ஒரு குப்புராஜ் என்பவருக்கு மனுச்சொத்து முழுவதையும் கடந்த 13.10.2021-ம் தேதியில் ஆவண எண்.6182/2021-ல் பதிவு செய்யப்பட்ட கிரையப்படி கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள். எனவே மனுச்சொத்தானது எதிர்மனுதாரர் பெயரில் இல்லை. எதிர்மனுதாரர் பெயரில் இல்லாத மனுச்சொத்தினை தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்யக்கோரி மனுதாரர் மேற்படி உண்மைகள் அனைத்தையும் மறைத்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனுவானது அவசியம் இல்லாத ஒன்றாகும். எனவே, இந்த மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் முன் வைக்கப்பட்டுள்ளது.

## 4. தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்:

இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா என்பதே ஆகும்?

5. இந்த மனு விசாரணையின் போது சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

## 6. தீர்வு:-

6.1. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது.

6.2. அசல் வழக்கானது, கடனுறுதி சீட்டு அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், இந்த மனுவின் மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி என்றும், வாதி இந்த வழக்கை தாவா தொகையை பிரதிவாதியிடம் இருந்து திரும்ப பெற தாக்கல் செய்துள்ளார் என்றும், கடந்த 01.03.2019-ம் தேதியன்று மனுதாரரிடம் எதிர்மனுதாரர் குடும்ப மற்றும் வியாபார செலவிற்காக கடனாக ரூ.8,00,000/- பெற்றுக் கொண்டு அதற்கு மாதம் ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து மனுதாரர் கேட்கும் போது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு பிராமிசரிநோட் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரை பலமுறை தொகை செலுத்தக் கேட்டும் எதிர்மனுதாரர் வேண்டுமென்றே தொகை செலுத்தாமல் காலம் தாழ்த்தி வந்தார் என்றும், எதிர்மனுதாரர் அசலோ வட்டியோ இதுவரை செலுத்தவில்லை என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கடன் தொகை செலுத்தக் கூடாது என்று அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை வில்லங்களுக்கு உட்படுத்த தீவிரமாக முயற்சி செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் அவ்வாறு சொத்தினை வில்லங்களுக்கு உட்படுத்தினால் வழக்கில் கோரியுள்ளபடி வாதி தீர்ப்பு பெற்றாலும் தொகை வசூல் செய்ய இயலாமல் போய்விடும் என்றும், எனவே தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யக் கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு 12 சதவீத வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டார் என்றும், ஆனால் மனுதாரர் 9 சதவீத வட்டி கோரியுள்ளார் என்றும், எனவே வழக்கு தொகை ரூ.9,78,060/-க்கு உத்திரவாதம் தாக்கல் செய்ய வேண்டும் தவறும் பட்சத்தில் மனுச் சொத்தினை ஜப்தி செய்ய வேண்டும் என்றும், எனவே, இந்த மனுவினை அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.3. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில் தாவா பிராமிசரியில் சாட்சி கையெழுத்து செய்துள்ள மோகன்பிரசாத் என்பவரையும், பிராமிசரியை எழுதியுள்ள சிதம்பரம் என்பவரையும் எதிர்மனுதாரருக்கு யார் என்றே தெரியாது என்றும், மேற்படி தாவா பிராமிசரியில் உள்ள கையெழுத்து எதிர்மனுதாரரின் கையெழுத்து அல்ல என்றும்,

எனவே எதிர்மனுதாரரின் பிராமிசரியில் உள்ள கையெழுத்தினை அவரது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்வதற்காக கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப தனியாக மனுதாக்கல் செய்ய உள்ளார் என்றும், மேலும் மனுச்சொத்து மற்றும் பிற சொத்தினை எதிர்மனுதாரர் அவரது மகளான சௌமியாஸ்ரீ என்பவருக்கு கடந்த 13.03.2019-ம்தேதியிட்ட சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.1401/2019-ல் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி எழுதிக்கொடுத்து அன்றைய தினமே சுவாதீனமும் கொடுத்து விட்டார் என்றும், பின்னிட்டு சௌமியாஸ்ரீ ஒரு பகுதி சொத்துக்களைப் பொறுத்து அவரது சகோதரி இலக்கியாவிற்கு கடந்த 08.01.2020-ம் தேதியில் ஆவண எண்.124/2020-ன் படியும், கடந்த 23.01.2020-ம் தேதியன்று ஆவண எண்.319/2020-ன் படியும் 2 தானசெட்டில்மெண்ட் பத்திரங்களாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பின்னிட்டு எதிர்மனுதாரரின் மகள்கள் சௌமியாஸ்ரீ மற்றும் இலக்கியா இருவரும் சேர்ந்து ஒரு குப்புராஜ் என்பவருக்கு மனுச்சொத்து முழுவதையும் கடந்த 13.10.2021-ம் தேதியில் ஆவண எண்.6182/2021-ல் பதிவு செய்யப்பட்ட கிரையப்படி கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றும், எனவே மனுச்சொத்தானது எதிர்மனுதாரர் பெயரில் இல்லை என்றும், எதிர்மனுதாரர் பெயரில் இல்லாத மனுச்சொத்தினை தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்யக்கோரி மனுதாரர் மேற்படி உண்மைகள் அனைத்தையும் மறைத்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, இந்த மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**7.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. தாவா பிராமிசரிநோட் பொய்யானது என்று எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. தாவா புரோநோட் உண்மையானதா வாதிக்கும் பிரதிவாதிக்கும் வரவு செலவு இருந்ததா என்பதை அசல் வழக்கில் தான் முடிவு செய்ய இயலும். மனுச்சொத்து மனுதாரர்க்கு பாத்தியப்பட்டது என்று மனுதாரர் கூறியுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில்

மனுச்சொத்து எதிர்மனுதாரர் எதிர்வுரையில் கூறியுள்ளபடி மனுச்சொத்து மற்றும் பிற சொத்தினை எதிர்மனுதாரர் அவரது மகள் சௌமியாஸ்ரீ-க்கு 13.03.2019-ல் தான செட்டில்மெண்ட் ஒதுக்கிக் கொடுத்துள்ளார் என்பதும், பின்னிட்டு சௌமியா சொத்துக்களை 08.01.2020-ல் மற்றும் 23.01.2020 தானசெட்டில்மெண்ட் பத்திரங்களாக எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், பின்னிட்டு சௌமியா, இலக்கியா இருவரும் சேர்ந்து ஒரு குப்புராஜ் என்பவர்க்கு 13.10.2021 ல் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டனர் என்பதும், எதிர்வுரையுடன் தாக்கல் செய்துள்ள 13.03.2019 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் வில்லங்கச் சான்றிதழ் மூலம் தெரியவருகிறது. எனவே எதிர்மனுதாரருக்கு பாத்தியம் இல்லாத சொத்தில் தீர்ப்புக்கு முன் ஜப்தி உத்தரவு மனுவில் கூறியவாறு மனுதாரர் பெற இயலாது. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகையில்லை.

8. முடிவாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகையில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும்</u>
<u>மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள்</u> -இல்லை-

<u>எதிர்மனுதாரர் தரப்புசாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u> -இல்லை-

(ஒம்/-N.ஷர்மிளா)
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.